# Deposition of Witness
# Additional Subordinate Judge, Tenkasi.
# MCOP.298/2021

ம.சா.1 மாரிமுத்து

| | |
|---|---|
| Name | : மாரிமுத்து |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :01.07.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அச்சன்புதூர் காவல்நிலையத்தில் விபத்தினை குறித்து குற்ற ண்.241/2018, பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.1. மனுதாரரின் காயச்சான்றிதழ் – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.2. 2ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட TN–76–P–1775 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.3. 2ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட TN–76–P–1775 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.4 ஆகும். 2ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட TN–76–P–9040 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் MVI Report – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.5. பார்வை மகஜர் – ஜெராக்ஸ் – ம.சா.ஆ.6.

மனுதாரர் ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் ஒளிநகல் – ம.சா.ஆ.7. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>3 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் விபத்திற்கு முன்பு சொந்தமாக லாரி வைத்து, தொழில் செய்து வந்தேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் எண்.TN–52–D–1861 ஆகும். மேற்படி வாகனத்தின் பதிவுச்சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற TN–76–C–9040 என்ற ஆட்டோ எனக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற ஆட்டோவானது பயணிகள் ஆட்டோ என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் ஆட்டோவிற்கு சட்டப்படி செல்லத்தக்க பதிவுச்சான்றிதழ் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆட்டோவின் பதிவுச்சான்றிதழின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் பயணிகள் ஆட்டோவை ஓட்டிச் செல்வதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் என்னிடம் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் ஓட்டிச் சென்ற பயணிகள் ஆட்டோவிற்கு விபத்து நடந்த சமயத்தில் காப்பீடு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சதுரகிரி மலை கோவிலுக்கு சென்று வரும் வழியில் விபத்து நடந்தது என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் செங்கோட்டை விஸ்வநாதபுரம் என்றால் சரிதான். அங்கிருந்து சதுரகிரி மலைக்கு சுமார் 90 கி.மீ தூரம் இருக்கும். பயணிகள் ஆட்டோவானது, எந்த வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு

செய்யப்பட்டுள்ளதோ அதிலிருந்து 30 கி.மீ தூரம் அளவிற்கு ஆட்டோவை இயக்க வேண்டும் என்றால் சரிதான். அச்சன்புதூர் - வடகரை செல்லும் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக நான் ஆட்டோவை ஓட்டிச் செல்லும் போது, எதிர்த்திசையில் 1ம் எதிர்மனுதாரர் ஜாபர் அலி TN-76-P-1775 என்ற மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது, இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்தவரை கவனிக்காமல், திடீரென ஆட்டோவை வலது பக்கமாக சைகை காண்பிக்காமல் திருப்பி 1ம் எதிர்மனுதாரர் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவினால் தான் நடந்தது என்று போலீசார் முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்று குற்றத்தை ஒப்புக்கொண்டு செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அபராதம் கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். விபத்து என்னுடைய கவனக்குறைவால் நடைபெறவில்லை என்று நான் காவல்துறை உயர்அதிகாரிகளின் மூலமாகவோ, நீதிமன்றம் மூலமாகவோ மனு செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து என்னுடைய கவனக்குறைவால் நடந்தது என்பதினால், 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இருசக்கரவாகனத்தை மெதுவாகத் தான் ஓட்டி வந்தார் என்றும், விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனது வலது கால் தொடையில் அறுவை சிகிச்சை நடந்தது என்பதை நிருபிக்க எந்தவிதமான சிகிச்சை விபரங்களோ, மருத்துவ

பில்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா? என்றால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆனால், மாத்திரை மருந்துகள் சாப்பிட்டு கொண்டிருக்கிறேன். இந்த விபத்தானது, 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றாலும், காப்பீடு நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. எனது கோரிக்கை மனுவானது, 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.